## மாத்தறை பிரதேச சபை

## மாத்தறை மாவட்டம்

---

1. நிதிக் கூற்றுக்கள்

---

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

---

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 26 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 ஆகஸ்ட் 26 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 23 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்

---

இவ்வறிக்கையின் பந்தி 1.3.2 இல் குறிப்பிட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கல்கள் தவிர, நிதிக் கூற்றுக்களின் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான மாத்தறை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களின் பிரகாரம் உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகிறது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---

1.3.1 இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணக்கமின்மை

---

(அ) 2010 ஜனவரி 19 திகதிய இலக்கம் PED/54 கொண்ட அரச தொழில் முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்று நிருபத்தின் பிரகாரம் 2011 ஜனவரி 01 திகதி முதல் உள்ளுராட்சி நிறுவனங்கள் அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுகளை தயாரிக்க வேண்டும். எனினும் அந் நியமங்களை கடைபிடித்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களுடன் காசுப்பாய்ச்சல் கூற்று சமர்ப்பித்திருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவையாகவுள்ள ஏனைய வருமானங்களின் கூட்டுத்தொகை ரூபா 61,201,915 தொகையொன்று காணப்பட்ட போதும், மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் ஆரம்ப பெறுமதியாக ரூபா 61,680,564 தொகையொன்று

காட்டப்பட்டமையால் ரூபா 478,669 தொகையொன்று மிகையாகக் கணக்கீடு செய்யப்பட்டுள்து.

(ஆ) (i) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 1,762,296 இற்கான இறுதி இருப்பு வகைப்படுத்தப்படாமல் நிதிக் கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ii) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 46,812 பெறுமதியான வீதி விளக்குகள் மற்றும் எரிபொருள் இருப்புக்களின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்கான செலுத்தப்படாத சம்பளங்கள் வேதனங்களின் பெறுமதி ரூபா 49,276 இற்கான தொகை நிதிக் கூற்றுக்களில் வகைப்படுத்தப்படாமல் செலவு கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டின் போதும் சுட்டிக் காட்டப்பட்டிருந்த இக் குறைபாடுகள் மீளாய்வாண்டின் போதும் சரிசெய்திருக்கவில்லை.

(ஈ) பிரதேச சபையின் எல்லை மதில் நிர்மாண வேலையினை தடுத்து வைத்தல் தொகை என கெக்கனதுர விவசாய அமைப்பிற்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா 134,714 தொகை நிதிக் கூற்றுக்களில் கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 10,112 ஆக காணப்பட்ட சபையின் ஊழியர் பிணை முதலீடுகளின் பெறுமதியினை திருப்பி செலுத்த வேண்டிய வைப்புக்கள் என நிதிக் கூற்றுக்களில் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஊ) 2013 மே 23 திகதி புதிய கட்டிட திறப்பு விழாவிற்காக செலுத்தியிருந்த ரூபா 20,000 முற்பணத்தில் இருந்து செலவு செய்யப்படாமல் மீதியாக காணப்பட்ட தொகை ரூபா 7,221 அதனை 2013 மே 29 திகதி 93199 இலக்க பற்றுச் சீட்டின் மூலம் தீர்க்கப்பட்டிருந்ததுடன் ரூபா 12,779 இற்கான செலவுகளை கணக்கீடு செய்யாமல் முற்கொடுப்பனவுகளின் கீழ் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளன.

(ஐ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய ரூபா 1,632,428 இற்கான ஓய்வூதியப் பங்களிப்புத் தொகைக்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிக்கவில்லை.

(ஒ) முன்னைய ஆண்டிற்கான நீதிமன்றத் தண்டப்பணத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த தொகை ரூபா 360,000 தொகையொன்று காணப்பட்டதுடன் உள்ளவாறாக கிடைத்திருந்த தொகை ரூபா 286,818 ஆகும். இதன் பிரகாரம் ரூபா 73,182 மிகை ஒதுக்கம் தொடர்பாக நாட்குறிப்புக்களின் மூலம் கணக்குகளில் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஓ) மீளாய்வாண்டிற்காக பெறவேண்டிய ஏக்கர் வரி வருமானம் ரூபா 11,238 தொகை என ஏக்கர் வரி பதிவேட்டில் பதியப்பட்டிருந்தது. எனினும் நிதிக் கூற்றுக்களில் வருமான கடன்பட்டோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஔ) மீளாய்வாண்டிறகான வைப்புப் பதிவேடுகளின் பிரகாரம் ரூபா 8,810,065 இற்கான 04 கணக்கு விடயங்கள் தொடர்புடைய வைப்புக்களின் பெறுமதி திருப்பி செலுத்த வேண்டிய வைப்புக்கள் என நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 06 கணக்கு விடயங்கள் தொடர்பான பெறுமதி ரூபா 10,054,436 ஆக காணப்பட்டதுடன் பட்டோலைகளின் பிரகாரம் அக் கணக்குகளின் பெறுமதி ரூபா 6,812,335 ஆகக் காணப்பட்டமையால் வித்தியாசம் ரூபா 3,242,101 ஆகும்.

1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சிய பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 1,955,004 ஆகும்.

(ஆ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சிய செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 68,630,300 ஆகும்.

1.3.5 தீர்க்கப்படாத கணக்குகள்

---

ரூபா 34,276,293 இற்கான 07 கணக்கு மீதிகள் மீளாய்வாண்டின் போதும் தீர்க்கப்படாமல் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளன.

1.3.6 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---

ரூபா 41,421,111 பெறுமதியான 07 கணக்கு விடயங்கள் தொடர்பான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

---

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங் களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 2002 நவம்பர் 28 திகதிய இலக்கம் 2002/02 கொண்ட திறைசேரி செயலாளரின் சுற்று நிருபம் | கணனி துணைக் கருவிகள் மற்றும் மென்பொருள் கருவிகள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2005 மார்ச் 31 திகதிய இலக்கம் 08/2005 கொண்ட பொது நிருவாகச் செயலாளரின் சுற்று நிருபம் | ஆதனக் கடன் தொடர்பாக திருத்தப்பட்ட சுற்று நிருபத்தின் பிரிவு 11.5 இன் பிரகாரம் ''ஆதனக்கடன் தொடர்பாக வங்கி வட்டி வீதம் மற்றும் அலுவலர்களிடம் அறவிடப்படும் நூற்றிற்கு 4.2 என்ற வட்டி வீதம் இவை இடையிலான வித்தியாசம் அரசினால் பொறுப்பேற்கப்படும்'' என குறிப்பிடப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் 11 அலுவலர்கள் பெற்றிருந்த கடன்கள் தொடர்பாக சபை நிதியத்தில் இருந்து செலுத்தியிருந்த ரூபா 111,506 தொகை 2014 ஆகஸ்ட் 14 வரை மீளளிப்புச் செய்யப்பட்டிக்கவில்லை. |

2. நிதி மீளாய்வு

--------------------------

2.1 நிதி விளைவுகள்

-----------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவுகள் ரூபா 2,421,337 ஆக காணப்பட்டதுடன், அதற்கு மாறாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,296,972 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

--------------------------------

2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

---------------------------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு தொடர்பாக தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | மதிப்பீட்டு | உள்ளவாறான | 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| வீதவரி | 1,510 | 327 | 697 |
| வாடகை | 4,313 | 1,294 | 1,129 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,799 | 834 | 76 |
| ஏனைய வருமானம் | 51,874 | 35,909 | 96,644 |

2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

-----------------------------------------------------------------

(அ) வீத வரி

-------------

மீளாய்வாண்டின் ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு நிலுவையாக இருந்த வீதவரியின் பெறுமதி ரூபா 817,999 ஆக காணப்பட்டதுடன் ஆண்டின் போது பில்போட்டவை ரூபா 298,089 உடன் மொத்தமாக மீளாய்வாண்டின் போது அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 1,116,088 ஆக காணப்பட்டது. ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட தொகை ரூபா 540,185 ஆக காணப்பட்டமையால் அறவீடுகளின் சதவீதம் நூற்றிற்கு 48 ஆகக் காணப்பட்டது. மேலும் 1987 இன் 15 இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 158(1)(இ) இன் பிரகாரம் வருமானம் அறவீடு செய்வதற்கான அதிகாரம் வழங்கப்பட்ட வருமான அறவீட்டு அதிகாரியினை சபைச் செயலாளரின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வாடகை

-------------

மீளாய்வாண்டின் ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு நிலுவையாக உள்ள வாடகை ரூபா 1,129,898 ஆகக் காணப்பட்டதுடன் ஆண்டின் போது பில் போடப்பட்டவைகள் ரூபா 834,618 தொகையுடன் மொத்தமாக மீளாய்வாண்டின் போது அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 1,964,516 ஆகும். ஆண்டின் போது அறவிடப்பட்டுள்ள தொகை ரூபா 959,226 ஆக காணப்பட்டமையால் அறவீடுகளின் சதவீதம் நூற்றிற்கு 48 ஆக காணப்பட்டது.

(i) சபையின் கடைகளுக்கான வாடகை அறவீடு செய்யும் போது கெக்கனந்துர சுவர்ண புரவர 07 கடைகளுக்காக 2005 ஆண்டின் போது பெறுமதி மதிப்பீடு மேற்கொள்ளப்பட்ட தொகையை விட நூற்றிற்கு 35 பதிவழிப்பதற்கு 2012 ஜூன் 28 திகதி நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது.

(ii) கெக்கனந்துர சுவர்ணபுர கடைகளில் இருந்து ரூபா 43,875 தொகையும், கெக்கனந்துர கைத்தொழில் நகரில் காணிகள் வாடகைக்கு கொடுக்கப்பட்டவைகள் தொடர்பாக மீளாய்வாண்டில் உள்ளவாறு நிலுவை தொகை ரூபா 23,100 ஆகும்.

(iii) 2005 ஆண்டின் போது உடைந்து அகற்றப்பட்ட 04 கடைகளில் இருந்து ரூபா 300,335 தொகை ஒன்று அறவிடப்பட வேண்டியிருந்த போதும் அத் தொகையினை அறவீடு செய்திருக்கவில்லை.

(iv) நிலுவை வாடகை தொடர்பாக கீர்த்தி முணசிங்க என்பவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த இலக்கம் 9254 கொடை வழக்கின் தீர்ப்பின் பிரகாரம் கடைவாடகை மற்றும் தண்டப்பணமாக ரூபா 116,313 தொகையொன்று அறவிடப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதும் அத் தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.3 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரின் மற்றும் ஏனைய அலுவலர்களினால் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டியிருந்த தொகைகள் பின்வருமாறு.

| | | ரூபா |
|---|---|---|
| (அ) | நீதிமன்றத் தண்டப் பணம் | 433,181 |
| (ஆ) | முத்திரைக் கட்டணம் | 10,711,976 |

3. செயற்பாட்டு மீளாய்வு

----------------------------------

3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

-----------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

3.1.1 தற்காலிக மலகூடம் மற்றும் குளியல் அறை நிர்மாணித்தல்

---

உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் 2011 செப்டம்பர் 06 திகதி கடிதத்தின் பிரகாரம் மேற்குறிப்பிட்ட பிரேரணை நிறைவேற்றப்பட்டு தேவையான ஏற்பாடுகள் சிறைச்சாலைகள் மற்றும் மறுசீரமைப்பு கௌரவ அமைச்சரிடம் அல்லது சபை நிதியத்தில் இருந்து மேற்கொள்வதற்கு அங்கீகரிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் அவ் வேலை மாகாவிட சமூர்தி சேனையுடன் உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டு 2012 செப்டம்பர் 06 திகதி ரூபா 92,101 தொகையொன்று சபை நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்த போதும் 2014 ஆகஸ்ட் 20 திகதி வரை அத் தொகையை மீளளிப்பு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

3.1.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

---

சபையினால் பராமரிக்கப்படும் ஆர்ட்கோல் மெய்வளர்ச்சி நிலையம் தொடர்பாக 2013 ஆண்டின் கணிப்பீட்டு சபை அறிக்கையின் பிரகாரம் ஆர்ட்கோல் மெய்வளர்ச்சி நிலையத்திற்கு வழங்கியிருந்த 14 பண்ட விடயங்கள் தொடர்பாக குறைவுகள் காணப்பட்டதென அறிவிக்கப்பட்டிருந்த போது அக் குறைவுகளின் பெறுமதியினை கணித்துபொறுப்பு வாய்ந்த அலுவலர்கள் அல்லது நபர்களை இனங்கண்டு உரிய நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

3.1.3 பண்டக் கணிப்பீடு

---

2013 ஆண்டின் போது கணிப்பீட்டு சபையின் மூலம் பற்றாக் குறை என இனங்காணப்பட்டிருந்த பண்டங்கள் மற்றும் உபகரணங்களின் பெறுமதியின் மதிப்பீடு செய்து அவற்றிற்கு பொறுப்பான அலுவலர்களை இனங்கண்டு உரிய நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

3.2 மனித வள முகாமைத்துவம்

---

2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணி மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பதவியின் வகைகள் | அங்கீகரிக் கப்பட்ட | உள்ளவாறான | வெற்றிடங்கள் | மிகை |
|---|---|---|---|---|
| நிறைவேற்று | 01 | 01 | - | - |
| இரண்டாம் தர | 32 | 36 | - | 04 |
| ஆரம்ப தர | 56 | 51 | 05 | - |
| ஏனைய(அமைய, தற்காலிக, ஒப்பந்த) | - | 04 | - | 04 |
| | 89 | 92 | 05 | 08 |

மீளாய்வாண்டின் போது உள்ளூராட்சி ஆணையாளரிடம் இருந்து பதவியணி சம்பளம் ஆக ரூபா 20,582,222 மீளளிப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் ஆண்டின்ன் போது பதவியணி சம்பளம் மற்றும் படியாக ரூபா 16,705,600 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தமையால் சபை நிதியத்திற்கு ரூபா 3,876,622 இற்கான மேலதிக செலவுப் பொறுப்பொன்று ஏற்பட்டுள்ளது.

4. கணக்கீட்டுத் தன்மையும் நல்லாட்சியும்

-----------------------------------------------------------

பாதீட்டுக் கட்டுப்பாடு

------------------------------

மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பீட்டு மற்றும் உள்ளவாறான செலவுகள் இடையே கணிசமான அளவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையானது பாதீடு பயன்தறு நிதிக் கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

--------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்